டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.03.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 219 - Madurai | Online Edition

# வேளாண் உணவு முறைகளில் பெண்களின் பங்கு குறித்த உலகளாவிய மாநாடு

## குடியரசுத் தலைவர் பங்கேற்பு

புது தில்லி, மார்ச் 13

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கடந்த 12ம் தேதி புதுதில்லியில் நடைபெற்ற வேளாண் உணவு முறைகளில் பெண்களின் பங்கு குறித்த உலகளாவிய மாநாட்டின் (GCWAS-2026) தொடக்க அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர், விதைப்பு, அறுவடை, பதப்படுத்துதல், பயிர்களை சந்தைகளுக்கு கொண்டு செல்வது உள்ளிட்ட அனைத்து விவசாய நடவடிக்கைகளிலும் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்றார். மீன்பிடித்தல், தேனீ வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, வன விளைபொருட்களை முறையாகப் பயன்படுத்துதல், விவசாயம் சார்ந்த நிறுவனங்களை நடத்துதல் உள்ளிட்ட பல துறைகளிலும் பெண்கள் அயராது உழைக்கிறார்கள் என்று அவர் கூறினார். விவசாயப் பொருளாதாரத்திற்கு பெண்கள் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்குகிறார்கள் என அவர் குறிப்பிட்டார்.

மாநில வேளாண் பல்கலைக்கழகங்களில் மொத்த மாணவர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண்களாக உள்ளனர் என்று குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார். இந்தப் பெண்கள் சிறந்த கல்வித் திறனை வெளிப்படுத்துகிறார்கள் எனவும், விவசாயம், உணவு தானியத் துறைகளில் இந்த நம்பிக்கைக்குரிய பெண்கள் தலைமை வகிக்க அதிக ஆதரவும் ஊக்கமும் வழங்கப்பட வேண்டியது அனைத்துத் தரப்பினரின் பொறுப்பாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபை 2026-ம் ஆண்டை 'சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டு' என்று அறிவித்துள்ளது என்று குடியரசுத் தலைவர் கூறினார்.

பாலின இடைவெளிகளைக் குறைப்பதற்கும், வேளாண்-உணவு மதிப்புச் சங்கிலிகளில் பெண்களுக்கான தலைமைப் பொறுப்புகளை ஊக்குவிப்பதற்கும் இந்தப் பிரகடனம் அழைப்பு விடுக்கிறது என்று குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில், விவசாயத்தில் பெண்களை மேம்படுத்த இந்தியா பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார். பெண்கள் தலைமையிலான சுய உதவிக்குழுக்கள், விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை ஊக்குவிக்கும் முயற்சிகள், விவசாயத்தில் பெண்களுக்கு அதிகாரமளிப்பதாக அவர் தெரிவித்தார்.

வேளாண் அறிவியல் முன்னேற்ற அறக்கட்டளை, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில், சர்வதேச வேளாண் ஆராய்ச்சிக்கான ஆலோசனைக் குழு போன்றவை இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன. நிலையான, உள்ளடக்கிய விவசாய உணவு அமைப்புகளை உருவாக்குவதில் பெண்களின் இன்றியமையாத பங்கு குறித்து இந்த மூன்று நாள் மாநாடு ஆலோசிக்கிறது.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## நெல்லிக்காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், மார்ச் 13

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல்லிக்கா யிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 17.03.26 மற்றும் 18.03.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழி) நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- நெல்லி பானங்கள் – பழ ரச பானம் மற்றும் தயார் நிலை பானம்
- நெல்லி ஜாம்
- தேன் நெல்லி, நெல்லி கேண்டி, நெல்லி மிட்டாய், பொடி மற்றும் துருவல்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# ஸ்ரீநகரில் முதன்முறையாக குளிர்ந்த நீர் மீன்வளம் குறித்த தேசிய மாநாடு

புது தில்லி, மார்ச் 13

மத்திய அரசின் மீன்வளத் துறை மார்ச் 14 அன்று ஜம்மு & காஷ்மீரின் ஸ்ரீநகரில் குளிர்ந்த நீர் மீன்வளத்தைப் பற்றிய முதல் தேசிய மாநாட்டை நடத்துகிறது. இந்த நிகழ்ச்சி மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் வழிகாட்டுதலில் நடைபெறுகிறது. ஜம்மு & காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் ஓமர் அப்துல்லா மற்றும் பல முக்கிய அதிகாரிகள் இதில் கலந்து கொள்கிறார்கள். இந்த மாநாட்டில் “குளிர்ந்த நீர் மீன்வள மேம்பாட்டிற்கான மாதிரி வழிகாட்டுதல்கள்” வெளியிடப் படுகின்றன.

இந்தியாவில் குளிர்ந்த நீர் மீன்வளம் பெரும்பாலும் இமயமலை மற்றும் உயர்நிலப் பகுதிகளில் காணப்படுகிறது. ஜம்மு & காஷ்மீர், லடாக் ஆகிய யூனியன் பிரதேசங்கள், ஹிமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட், அருணாச்சலப் பிரதேசம், சிக்கிம் போன்ற மாநிலங்களில் இது பரவியுள்ளது.

இப்பகுதிகளில் தூய்மையான நதிகள், ஏரிகள் மற்றும் ஓடைகள் இருப்பதால் குளிர்ந்த நீர் மீன்கள் வளர்வதற்கு ஏற்ற சூழல் உள்ளது. 278-க்கும் மேற்பட்ட மீன் இனங்கள் இங்கு காணப்படுகின்றன.

பிரதமரின் மீன் வளத் திட்டத்தின் கீழ் குளிர்ந்த நீர் மாநிலங் களுக்கு ரூ.2,299.56 கோடி முதலீடு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மீன் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள், மீன் வளர்ப்பு மையங்கள், குளிர்சாதன சேமிப்புகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் பிற உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் மீன்வள விவசாயிகளின் வருமானத்தையும் உற்பத்தியையும் அதிகரிக்க உதவுகின்றன.

ரெயின்போ ட்ரவுட், பிரவுன் ட்ரவுட், மஹ்சீர் போன்ற உயர்தர மீன் இனங்களுக்கு இந்தியாவில் நல்ல சந்தை உள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் ட்ரவுட் உற்பத்தி சுமார் 1.8 மடங்கு அதிகரித்துள்ளது. இருந்தாலும் இந்தியா இன்னும் சால்மன் மற்றும் உயர்தர ட்ரவுட் மீன்களை இறக்குமதி செய்கிறது.

அதனால் 2030-க்குள் குளிர்ந்த நீர் மீன் உற்பத்தியை இரட்டிப்பாக்கும் தேசிய திட்டத்தையும் அரசு அமைத்துள்ளது.

மேலும், மீன்வளத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பூங்காக்கள் மற்றும் குளிர்ந்த நீர் மீன்வள மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தொலைதூர மலைப் பகுதிகளில் மீன்களை சந்தைக்கு விரைவாக கொண்டு செல்ல ட்ரோன் தொழில்நுட்பத்தையும் அரசு சோதனை செய்து வருகிறது. இந்த மாநாடு குளிர்ந்த நீர் மீன்வள வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வேளாண் மாணவிகள் சார்பில் விழிப்புணர்வு பேரணி



திருச்சி, மாரச் 13

திருச்சிராப்பள்ளி மாவட்டம், புள்ளம்பாடி கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம், வேளாண் துறை இறுதியாண்டு மாணவிகள் தங்களின் ஊரக வேளாண் பயிற்சி அனுபவத்தின் ஒரு பகுதியான பேரணி நிகழ்ச்சியை நடத்தினோம். இப்பேரணியில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

மாணவர்கள் இடையே விவசாயத்தை காப்போம், இயற்கை விவசாயம் செய்வோம், நெகிலினியை தவிர்ப்போம், நிலத்தை காப்போம் நீரை சேமிப்போம், தண்ணீரை சேமிப்போம் தலைமுறையை காப்போம், இயற்கை விவசாயம் தான் எதிர்கால விவசாயம், சிறுதுளியே பெருவெள்ளம் நீரை வீணாக்காதே, இவ்வாறு மாணவர்கள் இடையே கொள்கை குரல் பேரணியை ஏற்படுத்தினோம். மாணவர்கள் உற்சாகமாக பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணிக்கான ஏற்பாடுகளை பெ.மோகனப்பிரியா, சீ.முத்துமதி, ர.நர்மதா, அ.நிறைமதி, ரா.பவித்ரா, ரா.பிரியா, க.ரூபஸ்ரீ, க.ச.சாதனா, அ.சாலினி, செ.சந்தியா உள்ளிட்ட மாணவர்கள் ஏற்பாடுகளை நடத்தினோம்.

# ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவித்தல் ஊக்கத்தொகை வழங்கல்

புது தில்லி, மார்ச் 13


கடந்த 5 ஆண்டுகளில் (2020-21 முதல் 2024-25 வரை) ஆந்திரப்பிரதேசத்தில் கடல்சார்ந்த மீன்பிடிப்பு கணிசமாக அதிகரித்துள்ளது. ஆழ்கடல் மீன்பிடிப்பு அளவு 2020-21-ல் 5.54 லட்சம் டன் என்பதிலிருந்து 2024-25-ல் 6.51 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

தனிச்சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஆழ்கடல் மீன் பிடிப்பை அதிகப்படுத்த ஆழ்கடல் மீன்பிடிப்பு உதவி, வழக்க மான படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப்பு படகுகளாக மாற்றுதல் ஆகிய திட்டங்களை மத்திய மீன்வளத்துறை அறிமுகம் செய்து உள்ளது. நீலப்புரட்சித் திட்டத்தின் கீழ் இவை மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. இதன்படி, ஆந்திரப் பிரதேசம் உட்பட கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஆந்திரப்பிரதேசத்தில் பாரம்பரிய மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடிப்பு உதவி திட்டத்தின் கீழ் 12 ஆழ்கடல் மீன்பிடிப்பு படகுகளை வாங்க 9 கோடியே 60 லட்சம் ரூபாய் நிதி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், 2 கோடியே 33 லட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. வழக்கமான படகுகளை ஆழ் கடல் மீன்பிடிப்பு படகுகளாக மாற்றும் திட்டத்தின் கீழ், 57 மீன்பிடி படகுகள் வாங்க 8 கோடியே 58 லட்சம் ரூபாய்க்கு அனுமதி அளிக்கப்பட்டு மத்திய மீன்வளத்துறையால் 4 கோடியே 27 லட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடி படகுகள் வாங்கு வதற்கான உதவி திட்டத்தின் கீழ், மத்திய அரசால் 15 கோடியே 26 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு, ஆந்திரப் பிரதேசத்தின் பாரம்பரிய மீனவர்கள் 50 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை வாங்குவதற்கு 6 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மத்திய மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு, பால்வளத்துறை இணையமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங் மாநிங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணி பயன்பாடுகள் குறித்த பயிற்சி

ராணிப்பேட்டை, மார்ச் 13

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டாரத்தில் வேளாண்மைதுறை அட்மா திட்டத்தின் கீழ் உயிர் உரங்கள் மற்றும் உயரியல் கட்டுப்பாட்டு காரணி பயன்பாடுகள் குறித்த பயிற்சி பரமேஸ்வரமங்கலம் கிராமத்தில் விவசாயிகளுக்கு நடைபெற்றது.



பயிற்சிக்கு தலைமை தாங்கிய வேளாண்மை உதவி இயக்குனர் அருணாகுமாரி, மண்வளம் பாதுகாத்தல் மற்றும் பசுந்தாள் உரம் சாகுபடி குறித்து பேசினார். சகாய தோட்டம் வேளாண்மை கல்லூரி பூச்சியியல் துறை பேராசிரியர் பியூலா, உயிரியல் கட்டுப்பாட்டு காரணி மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்து விளக்கமாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் செந்தில்குமார், அனைத்து விவசாயிகளும் வேளாண் அடுக்கத்தில் பதிவு செய்ய வேண்டும் எனவும் துறை சார்ந்த திட்டங்கள் குறித்தும் பேசினார்.

அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி பயிற்சியை ஒருங்கிணைத்தார். பயிற்சியில் உதவி தொழில் நுட்ப மேலாளர் மற்றும் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# விதைகளை சேமிக்கும் வழிமுறைகள்

விதைகள் விற்பனைக்காகவும், அதிகப்படியான விதைகள் தேவையான தருணத்திற்காகவும்,ஆதார வித்துக்களாகவும் சேமித்து வைக்கப்படுகின்றன.

பொதுவாக, உற்பத்தியாகும் விதைகளில் பெரும் பகுதி அடுத்த பருவத்திற்காக சேமிக்கப் படுகிறது. இவ்விதைகளை ஒரு ஆண்டு காலம் வரை சேமிக்க வேண்டியிருக்கும். இவ்வாறு விதைகளை சேமித்து வைக்க வேண்டிய தருணத்தில் அவற்றின் வீரியத் தன்மையும், முளைப்புத் தன்மையும் குறையாமல் பாதுகாத்தல் மிகவும் அவசியமாகும்.

விதை உற்பத்தி செய்வதில் எவ்வளவு கவனம் தேவையோ, அதே அளவு கவனம் விதைகளை அடுத்த விதைப்புப் பருவம் வரை சேமித்து வைப்பதிலும் தேவைப்படுகிறது.

விதைகளின் சேமிப்புத்திறன் பயிருக்குப் பயிர் மாறுபடும். விதையின் ஈரப்பதத்தை பொருத்தும் விதையின் சேமிப்புத்திறன் மாறுபடுகிறது.

சேமிப்பில் உள்ள விதைகளின் ஈரப்பதம் அதிகமாக இருந்தால், அதன் சேமிப்புக் காலம் குறைகிறது. ஈரத்தன்மை அதிகமாகும் போது பூஞ்சாணங்கள் விதையின் மேற்புறத்தில் வளர்ந்து முளைப்புத் திறனைக் குறைக்கிறது. எனவே விதை சேமிப்பில் பின்வரும் வழிமுறைகளை கையாள வேண்டும்.

கதிர் அடிக்கும் களங்கள், விதை சேமிப்பு அறைகளுக்கு மிக அருகாமையில் இருக்காமல் பார்த்துக் கொள்வதோடு, சிதறிய விதைகளை உடனடியாக சுத்தம் செய்து அப்புறப்படுத்த வேண்டும். அறுவடைக்குப்பின் விதைகளை நன்றாக உலர்த்தி, ஈரப்பதத்தை உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறு வகை பயிர்களுக்கு 9 சதம், சோளம், கம்பு போன்ற பயிர்களுக்கு 12 சதம், நெல்லுக்கு 13 சதவிகிதம் அளவிற்கு குறைக்க வேண்டும். நன்கு சுத்தம் செய்யப்பட்டு கல், தூசி நீக்கிய விதைகளை புதிய சாக்குப் பைகளில் சேமிக்க வேண்டும்.

விதை சேமிப்பிற்குப் பயன்படுத்தப்படும் சாக்குகள் புதியதாக அல்லது பூச்சியற்றதாக இருக்க வேண்டும். பழைய சாக்குகளை மாலத்தியான் அல்லது டைகுளோர்வாஸ் 0.1 சத (1 மிலி மருந்தை 1 லி. தண்ணீரில் கலக்க வேண்டும்) கரைசலில் நனைத்து, உலர்த்தியப் பின் விதைகளை சேமிக்கப் பயன்படுத்தலாம்.

விதைகளைச் சேமிப்பதற்கு முன், சேமிப்பு அறை முழுவதும் மாலத்தியான் 50 ஈசி என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 மிலி என்ற அளவில் கலந்து 100 சதுரமீட்டருக்கு 3 லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

பூச்சிகள் வருமுன் காக்க மாலத்தியான் 5 சத தூளை ஒரு கிலோ விதைக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து சேமிக்கலாம். உணவுக்காக பயன்படுத்தும் தானியத்தில் இதனைப் பயன் படுத்தக்கூடாது.

துவரை, உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப்பயறு போன்ற பயறு விதைகளை சேமிக்கும் போது வேப்பெண்ணெய் அல்லது இதர உணவு எண்ணெய்யை ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி அல்லது ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து சேமிக்கலாம்.

ஆகவே மேற்கண்ட ஒருங்கிணைந்த முறைகளில் விதை களை சேமித்து விதையின் முளைப்புத்திறனை பாதுகாக்கலாம் என திருநெல்வேலி விதைப்பரிசோதனை அலுவலர் ஆனந்தி ராதிகா மற்றும் தூத்துக்குடி விதைப்பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண்மை அலுவலர் சேக் நூஹ் ஆகியோர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# காணாமல் போகும் மேய்ச்சல் நிலங்கள் (PASTURE LAND)

50 ஆண்டுகளுக்கு முன் ஒவ்வொரு கிராமங்களில் மேய்ச்சல் நிலங்கள் ஆடு, மாடுகளை அடைக்கும் தொழுவங்கள் (பவுண்டு) இருந்தன. அப்போது ஊர் கால்நடைகளை காலையிலே அவித்து மேய்ச்சலுக்கு அனுப்பி விடுவார்கள்.





அந்த கால்நடைகளை மேய்ப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருப்பார்கள். இந்த கால்நடைகளை ஊர்காலி மாடுகள்' என்று சொல்லுவாங்க. மாலையில் அது வீடு திரும்பும் அதற்குபின் தான் மாட்டிலிருந்து பால் கறப்பாங்க.

தற்போதைய காலகட்டத்தில் இந்த நடைமுறைகள் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டன. அந்த மேய்ச்சல் நிலங்கள் படிப்படியாக காணாமலே போய்விட்டன. அப்போது நூற்றுக் கணக்கான மாடுகள் இருந்த நிலையில் இன்று கிராமங்களில் விரல் விட்டு எண்ணும் நிலையில் மாடுகள் உள்ளது.

2026 சர்வதேச மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் (கீதாரிகள்) ஆண்டாக அறிவிக்கும் தீர்மானத்தை நியூயார்க்கில் உள்ள ஐ.நா பொது சபையால் 15.3.22 அன்றே நிறைவேற்றப் பட்டது.

**மேய்ச்சல் நிலங்கள்**

பூமியின் நிலப்பரப்பில் சரி பாதியாக இருந்த மேய்ச்சல் நிலங்கள் நாகரீக வளர்ச்சியால் படிப்படியாக குறைந்து விட்டதாக தரவுகள் உள்ளன.

அவை மிகப்பெரிய சூழல் மண்டலமாக விளங்கிய நிலையில் முறையாக பராமரிக்க முடியாத நிலையில் பெரும் அழிவுக்கு உள்ளாகியிருக்கிறது.

உலகெங்குமுள்ள மேய்ச்சல் நிலங்கள் 50 கோடி கிடைக் காரர்களின் வாழ்வாதாரத்திற்கும் உணவுப் பாதுகாப்பிற்கும் ஆதரவாக உள்ளது என்பது மிகையல்ல.

**மேய்ச்சல் நிலத்தால் ஏற்படும் பயன்கள்?**

மேய்ச்சல் நிலத்தில் காணப்படும் புல், பூண்டு களைச்செடிகள் கால்நடைகளுக்கு தீவனமாக பயன்பட்டு வருவதுடன் கிடைக் காரர்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. இதனால் சமுதாயத்திற்கு தேவையான பால், இறைச்சி, மாமிசம், முட்டை மற்றும் உபரி பொருளாக தோல் ரோமங்கள் போன்றவை கிடைக்கின்றன.

நமது நாட்டில் 53% பாலும், 74% இறைச்சியும், மேய்ச்சல் நிலங்களில் மேயும் கால்நடைகள் மூலமாக கிடைப்பதாக தரவுகள் உள்ளன. இதன் மூலமாக மக்களுக்கு குறைந்த விலையில் சுத்தமான புரதசத்து நிறைந்த உணவு கிடைக்கிறது. கிராமப்புறங்களில் 70% மக்களுக்கு பாரம்பரிய கால்நடை மூலமாக வேலை வாய்ப்பும் கிடைக்கிறது.

**இந்தியாவில் இன்றைய நிலை**

இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 202 கால்நடை இனங்களில் 75 இனங்கள் கிடைக்காரர்களிடம் (ஆடு, மாடு மேய்ப்பவர் களிடம்) உள்ளதாக தரவுகள் உள்ளன. இந்தியாவில் 1.3 கோடி கிடை மாட்டுக்காரர்கள் (கீதாரிகள்) உள்ளதாகவும் தரவுகள் உள்ளன. இவர்கள் 46 சமுதாயங்களை (COMMMUNITY) சேர்ந்தவர்களாக உள்ளனர்.

தமிழகத்தில் தோடர்கள், பர்கூர், லிங்காயத், யாதவர்கள், குறும்ப கவுண்டர்கள், வன்னியர்கள் இன்னும் பிற சமுதாயத் தவர்கள் ஆடு, மாடுகளை மேய்க்கும் தொழிலை மேற்கொண்டனர். இப்போது படிப்படியாக குறைந்த விட்டனர்.

**ஆடு, மாடுகளை எந்த காலத்தில் மேய்ச்சலுக்கு அனுப்ப பட்டது?**

பருவ காலங்களுக்கேற்ப விவசாய பணிகள் நடக்கும் இடங்களை தேடி, பல மைலுக்கு அப்பால் சென்று மேய்ச்சலில் மேயவிட்டு இரவு நேரங்களில் ஆடுகள் மாடுகள் பட்டி அமைத்து கிடை அமர்த்துவார்கள்.

அந்த கிடை ஒரு நாள் இரவுக்கு கால்நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப வாடகை அதிகமாகும். நிலத்தில் ஆடு, மாடு சாணங்கள் சிறுநீர் கழிப்பதால் அவை மக்கிய தொழு உரமாகும். நிலத்தின் மண்வளமும் கூடும். இதனை பட்டி அடைத்தல் என்ற கலாச்சாரம் இன்றும் தொடர்கிறது.

**மேய்ச்சல் நில பாதுகாப்பிற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்?**

வனங்களில் மேய்ச்சல் பராம்பரிய உரிமையை வன உரிமைச்சட்டம் 2006 அங்கீகரித்தாலும், அது இன்னும் முழுமையாக செயல்படுத்தபட வில்லை.

இந்தியாவில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் (PANCHAYAT) சுமாராக 25 ஏக்கர் நிலத்தில் மேய்ச்சல் நிலங்களை பராமரிக்க மத்திய கால்நடை மற்றும் பால் வளத்துறை அமைச்சகம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது, இது வரவேற்கத்தக்கது. இது நடைமுறைப்படுத்தபடுமா என்பது மில்லியன் டாலர் கேள்வியாக உள்ளதாக கிடைக்காரர்கள் கூறுகின்றனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**




# பங்கேற்பு மதிப்பீடு நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, மார்ச் 13

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பூனம்பாளையம் கிராமத்தில், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைத் துறையில் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு (PRA) ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இந்த PRA செயல்பாடுகளில், கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் சமூக வரைபடம் (Social Map), வள வரைபடம் (Resource Map), காலவரிசை (Timeline), பிரச்சினை மரம் (Problem Tree), வென் வரைபடம் (Venn Diagram), செல்வ நிலை வகைப் படுத்தல் (Wealth Ranking), பருவகால அட்டவணை (Seasonal Calendar) மற்றும் தினசரி செயற்பாட்டு வரைபடம் (Daily Activities Drawing) போன்ற முக்கிய PRA கருவிகள் தயாரிக்கப் பட்டன.

இந்த வரைபடங்கள் மற்றும் விளக்கங்கள் மூலம், பூனம் பாளையம் கிராமத்தின் சமூக அமைப்பு, கிடைக்கும் இயற்கை வளங்கள், விவசாய பருவ மாற்றங்கள், கிராமத்தில் நிலவும் முக்கிய பிரச்சினைகள், மக்களின் வாழ்வாதார நிலை மற்றும் தினசரி வாழ்க்கை முறைகள் குறித்து தெளிவான தகவல்கள் பெறப்பட்டன.

மேலும், மாணவர்கள் தயாரித்த PRA வரைபடங்களை பொது மக்களுக்கு எளிய முறையில் விளக்கி, அவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டனர். இதன் மூலம் கிராம மக்கள் தங்கள் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைத்தது. இந்த PRA ஆய்வு நடவடிக்கைகள், மாணவர்களுக்கு நடைமுறை அனுபவத்தை வழங்கியதோடு, கிராம வளர்ச்சி மற்றும் நிலைத்த விவசாய வளர்ச்சிக்கான திட்டமிடலுக்கு உதவியாக அமைந்தது. கிராம மக்களும் மாணவர்களின் முயற்சியை பாராட்டினர்.

# ஒட்டும் பொறிகள் பற்றி விவசாயியிடம் எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, மார்ச் 13

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் ஒட்டும் பொறிகள் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளிடம் எடுத்துரைத்தனர்.

ஒட்டும் பொறிகள் (Sticky traps) என்பவை ரசாயனப் பயன்பாடு இன்றி, மஞ்சள் அல்லது நீல நிற அட்டைகள் மூலம் வெள்ளை ஈக்கள், அசுவினி போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கும் ஒரு சூழல் நட்பு முறையாகும்.

**1. மஞ்சள் ஒட்டும் பொறி (Yellow Sticky Trap)**

வெள்ளை ஈக்கள், அசுவினி (aphids), இலைப்பேன் (thrips) போன்றவற்றை ஈர்க்கும்.

**2. நீல ஒட்டும் பொறி (Blue Sticky Trap)**

த்ரிப்ஸ் (Thrips) பூச்சிகளைக் கட்டுப்படுத்த மிகவும் சிறந்தது பற்றி விளக்கம் அளித்தனர்.



# அணைப் பகுதிகள் மற்றும் நீர்த்தேக்கப் பகுதிகளில் மீன் பிடித்தலை ஊக்குவிப்பதற்கான கொள்கை

புது தில்லி, மார்ச் 13

மத்திய அரசின் மீன்வளத் துறை (DoF), மேல்நிலை அணை மற்றும் நீர்த்தேக்கப் பகுதிகளில் மீன்வளம், மீன்வளர்ப்பு, மீன்பிடித்தலை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து உள்ளது. ஏனெனில் இது நாட்டின் மீன் உற்பத்தியின் முக்கிய ஆதாரங்களில் ஒன்றாகும்.

இந்த பயன்படுத்தப்படாத வளங்களைப் பயன்படுத்துவதற் காக, மீன்வளத்துறை, அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுடன் கலந்தாலோசித்து நீர்த்தேக்க மீன்வள மேலாண்மைக்கான மாதிரி வழிகாட்டுதல் களை உருவாக்கி உள்ளது.

அதை செயல்படுத்துவதற்காக அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கும் அதை அனுப்பியுள்ளது.

பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நீர்த்தேக்க மீன்வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு, ஆதரித்துள்ளது.

**அவற்றில் சில:**

● 62,836 கூண்டு அலகுகளை நிறுவுதல்

● 3.0 லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் மீன் குஞ்சுகளை வளர்த்தல் மற்றும்

● 2,171.37 கோடி செலவில் 23 நீர்த்தேக்கங்களின் ஒருங்கிணைந்த மேம்பாடு

மேலும், 2026-27-ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டின் போது, 500 நீர்த்தேக்கங்கள், அமிர்த நிலைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த மேம்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை, மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த மீன்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங் தெரிவித்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

**PRODUCT RANGES**

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

**RITHVIK PIPES PROUDLY TRUSTED BY**

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தடயவியல் விசாரணைகளில் பூச்சிகளின் பயன்பாடு




**சுருக்கம்**

குற்றவியல் புலனாய்வுப் பிரிவில் பூச்சிகள் / கால்மூட்டுகள் பற்றிய ஆய்வு தான் தடயவியல் பூச்சியியல்.

ஆரம்ப கட்டங்களிலிருந்தே பூச்சிகள் அழுகும் உடலுக்கு ஈர்க்கப்பட்டு அதில் முட்டையிடக்கூடும். பூச்சிகளின் எண்ணிக்கை மற்றும் வளரும் லார்வா நிலைகளைப் படிப்பதன் மூலம், தடயவியல் விஞ்ஞானிகள் பிரேத பரிசோதனை குறியீடு, சடலத்தின் நிலையில் ஏற்படும் எந்த மாற்றத்தையும், இறப்புக் கான காரணத்தையும் மதிப்பிட முடியும். குற்றவியல் விசாரணை களில் ஒத்துழைக்க தடயவியல் பல் மருத்துவர்கள் அடிக்கடி அழைக்கப்படுகிறார்கள். எனவே தடயவியல் பூச்சியியல் வழங்க வேண்டிய சாத்தியக்கூறுகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். மேலும் அதை வழக்கமான தடயவியல் விசாரணை வழிமுறைகளுடன் இணைப்பாகவும் பயன்படுத்த வேண்டும்.


**அறிமுகம்**

தடயவியல் பூச்சியியல் என்பது குற்றவியல் விசாரணையில் பூச்சிகள் மற்றும் பிற ஆர்த்ரோபாட்களைப் பயன்படுத்துவது பற்றிய ஆய்வு ஆகும். பூச்சிகள் அல்லது ஆர்த்ரோபாட்கள் அழுகும் முதுகெலும்புள்ள சடலம் அல்லது அழுகிய சடலத்தில் காணப்படுகின்றன. இந்த பூச்சி காலனித்துவப்படுத்திகள் இறப்பு நேரத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படலாம். அதாவது இறப்புக்கும் சடல கண்டுபிடிப்புக்கும் இடையிலான நேர இடைவெளி, இது போஸ்ட்மார்ட்டம் குறியீடு (PMI) என்றும் அழைக்கப்படுகிறது. சடலத்தின் இயக்கம், இறப்புக்கான விதம் மற்றும் காரணம் மற்றும் இறந்த இடத்தில் சந்தேக நபர்களின் தொடர்பு. குற்றவியல் விசாரணையில் பூச்சிகள் மற்றும் அவற்றின் லார்வாக்களின் உருவவியல், வளர்ச்சி வரலாறுகள்,

இனங்கள் விநியோகம் மற்றும் அவற்றின் திசுக்களில் உள்ள நச்சு உள்ளடக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தடயவியல் தரவுகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து தடயவியல் ஓடோன்டாலஜிஸ்டுளுக்கு ஒரு கண்ணோட்டத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**வரலாறு**

குற்றவியல் விசாரணையில் பூச்சிகள் பயன்படுத்தப்பட்ட முதல் பதிவு செய்யப்பட்ட சம்பவம் 13ஆம் நூற்றாண்டு சீனாவில் நடந்தது. இது சங்கூவின் ‘தவறுகளை கழுவுதல்‘ என்ற புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு விவசாயி ஒரு வயலில் கூர்மையான ஆயுதத்தால் கொலை செய்யப்பட்டதாகக் கண்டறியப்பட்ட போது, அனைத்து சந்தேக நபர்களும் தங்கள் அரிவாள்களை தரையில் வைக்கச் சொல்லப்பட்டனர். ஒரு அரிவாள் மட்டுமே அடியாக ஈர்க்கப்பட்டு நிர்வாணக் கண்ணில் மறைந்திருக்கும் இரத்தத்தின் சுவடு அளவுக்கு பறக்கிறது. இதன் விளைவாக கொலையாளி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

நவீன நீதிமன்ற வளாகத்தில் தடயவியல் பூச்சியியல் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது 18ஆம் நூற்றாண்டு பிரான்சில். ஒரு குழந்தையின் எலும்புக்கூடு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட குடியிருப்பில் தற்போது வசிப்பவர்களை விடுவிப்பதற்கான ஆதாரமாக பூச்சியியல் தரவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில், யோவனோவிச் மற்றும் மெக்னின் ஆகியோரின் சடலங்கள் மீதான பூச்சி வாரிசுரிமை மதிப்பீடு தடயவியல் பூச்சியியல் அறிவியலை நிறுவியது.

ஆர்த்ரோபோட்கள் மற்றும் மனித உடலில் ஏற்படும் பிரேத பரிசோதனை மாற்றங்களுடனான அவற்றின் தொடர்பு, மரணம் ஏற்பட்டவுடன், செல்கள் இறக்கத் தொடங்குகின்றன. மேலும் நொதிகள் ஆட்டோலிசிஸ் எனப்படும் செயல்பாட்டில் செல்களை உள்ளே ஜீரணிக்கத் தொடங்குகின்றன. உடல் சிதைவடையத் தொடங்குகிறது. இரைப்பைக் குழாயில் இருக்கும் பாக்டீரி யாக்கள் ஹைட்ரஜன் சல்பைடு, கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன், அம்மோனியா, சல்பர் டை ஆக்சைடு மற்றும் ஹைட்ரஜன் போன்ற திரவங்கள் மற்றும் வாயுக்களை உருவாக்கும் மென்மையான திசுக்களை அழிக்கத் தொடங்கு கின்றன. சிதைவடையும் உடலில் இருந்து தப்பிக்கும் அபெனி யூமோன்கள் எனப்படும் ஆவியாகும் மூலக்கூறுகள் பூச்சிகளை

ஈர்க்கின்றன. உடலின் சிதைவின் வெவ்வேறு நிலைகளில் வெளியாகும் ஆவியாகும் இரசாயனங்களை ஆராய்ச்சி யாளர்கள் தனிமைப்படுத்த முடிகிறது.

ஒவ்வொரு கட்டத்திலும் வெளியிடப்படும் ஆவியாகும் மூலக் கூறுகள் பூச்சியின் நடத்தையை மாற்றியமைக்கலாம். க்ராக் மற்றும் பலர் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில், 1950 ஆம் ஆண்டில், அழுகும் சடலத்திற்கு ஈக்களை ஈர்ப்பதற்கு அழுகும் சல்பர் அடிப்படையிலான சேர்மங்கள் காரணமாக இருந்தன. ஆனால் ஈக்களின் முட்டையிடுதல் அல்லது முட்டையிடுதல் அழுகல் உடலில் இருக்கும் அம்மோனியம் நிறைந்த சேர்மங்களால் தூண்டப்படுகின்றன.

தடயவியல் விசாரணைகளில் பெரும்பாலும் ஈடுபடும் பூச்சிகள் உண்மையான ஈக்கள் அல்லது டிப்டெரா ஆகும். இந்த வரிசையில் உள்ள முக்கிய இனங்கள் காலிஃபோரிடே (ஊது ஈக்கள்), சாக்ரோபாகிடே (சதை ஈக்கள்) மற்றும் மஸ்கிடே (வீட்டு ஈக்கள்). காலிஃபோரிடே (ஊது ஈக்கள்), சாக்ரோபாகிடே (சதை ஈக்கள்) இறந்த சில நிமிடங்களுக்குள் வரக்கூடும். மஸ்கிடே (வீட்டு ஈக்கள்) உடல் சிதைவின் வீக்க நிலைகளை அடையும் வரை காலனித்துவத்தை தாமதப்படுத்துகின்றன.

கல்லிஃபோரிடே வயது வந்த ஈக்கள் பொதுவாக உலோக நிறத்துடன் பளபளப்பாக இருக்கும், பெரும்பாலும் நீலம், பச்சை அல்லது கருப்பு மார்பு மற்றும் வயிறு இருக்கும். சர்கோபாகிடே நடுத்தர அளவிலான ஈக்கள், மார்பில் கருப்பு மற்றும் சாம்பல் நீளமான கோடுகள் மற்றும் வயிற்றில் செக்கிங் கொண்டவை. வயது வந்த மஸ்கிடே 8-12 மிமீ நீளம் கொண்டது. அவற்றின் மார்பு சாம்பல் நிறமானது, பின் புறத்தில் நான்கு நீளமான இருண்ட கோடுகள் உள்ளன. முழு உடலும் முடி போன்ற நீட்டிப்பு களால் மூடப்பட்டிருக்கும். முட்டையிடுதல் அல்லது முட்டையிடும் வழக்கமான பகுதிகள் இயற்கையான உடல் திறப்புகள் மற்றும் காயங்கள் ஆகும். அவை குஞ்சு பொரிக்கும் போது, அவை மாகோட் எனப்படும் லார்வாவை உருவாக்கு கின்றன. அவை சிறிய ஆப்பு வடிவ உயிரினங்கள், முன்புற முனையில் ஒரு ஜோடி வாய் கொக்கிகள் உணவிற்காக உள்ளன.

புழுக்கள் மூன்று நிலைகள் அல்லது இன்ஸ்ட்ராக்களைக் கடந்து வேகமாக வளர்ந்து, முழு அளவை அடைகின்றன. முழு அளவை அடைந்ததும், உணவளிப்பது நின்று விடும், மேலும்

அவை வறண்ட பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து, கூட்டுப்புழு உருவாவதைத் தொடங்குகின்றன (கூட்டுப்புழு உருவாக்கம்). இந்த கட்டத்தில் புழுவின் வெளிப்புறதோல் கடினமாகி, ஒரு பாதுகாப்பு உறையை உருவாக்கி, இறுதியில் ஒரு ஈயாக வெளிப்படுகிறது.

### குற்றம் நடந்த இடத்தை தீர்மானிக்க பூச்சி தரவைப் பயன்படுத்துதல்

வெவ்வேறு வாழ்விடங்கள் மற்றும் சூழல்களில் அழுகும் சடலத்துடன் தொடர்புடைய பூச்சி இனங்களில் வேறுபாடுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கவனமாக ஆய்வு செய்தால் இனங்கள் மாறுபாடுகளைக் கண்டறிய முடியும். ஏனெனில் ஒரு சடலத்தில் இருக்கும் ஒரு வகை வாழ்விடத்துடன் தொடர்புடைய இனங்கள், இறந்த பிறகு சடலம் கொண்டு செல்லப்படும் போது உள்ளவற்றிலிருந்து வேறுபட்டதாகக் காணப்படுகிறது.

### இனங்கள் அடையாளம் காண டிஎன்ஏ பகுப்பாய்வு

லார்வாக்களின் வயதைக் கணக்கிடுவதற்கான முக்கியமான ஆரம்பப்படி சரியான இனத்தை அடையாளம் காண்பது தான். உருவவியல் ஒப்பீடு பொதுவாக இனங்களை அடையாளம் காணப் பயன்படுகிறது. இதற்கு சிறப்பு நிபுணத்துவம் தேவைப் படுகிறது மற்றும் பெரும்பாலும் நேரத்தை எடுத்துக் கொள்ளும்.



இந்த சிரமத்தைச் சமாளிக்க, லார்வா மரபணுக்களின் பொருத்தமான பகுதிகளை பாலிமரைஸ் செய்யப்பட்ட சங்கிலி எதிர் வினை பெருக்கி, அதை குறிப்புத் தரவுகளுடன் ஒப்பிடு வதன் மூலம் இனங்களை அடையாளம் காணலாம்.

**என்டோமோடாக்ஸிகாலஜி**

இறந்தவரின் உடலை உண்ணும் ஈக்களின் லார்வாக்கள், இறந்த நபர் உட்கொள்ளும் மருந்துகளைக் குவிக்கக் கூடும். சிதைவின் மேம்பட்ட நிலைகளில் அல்லது எலும்புக் கூடுகளாக மாறிய உடல்களில் நச்சுத் தன்மையுள்ள பொருட்களை ஆய்வு செய்வது கடினம். இந்த நிகழ்வுகளில், இந்த உடலை உண்ணும் லார்வாக்களை மெல்லிய அடுக்கு குரோமடோகிராபி, வாயு குரோமடோகிராபி மற்றும்/அல்லது மாஸ்ஸ்பெக்ட்ரோமெட்ரி போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தி மெசரேட் செய்து பகுப்பாய்வு செய்யலாம். லார்வாக்களின் வளர்ச்சி நிலைகளை நச்சுகள் பாதிக்கலாம்.

சடலத்தில் உள்ள கோகோயின் மற்றும் ஹெராயின் லார்வா வளர்ச்சியை துரிதப்படுத்தலாம். அழுகலில் உள்ள மால்தியோன் போன்ற விசங்கள் பூச்சி காலனித் துவத்தை தாமதப்படுத்தும்.

**முடிவுரை**

தடயவியல் பூச்சியியல் என்பது தடயவியல் அறிவியலில் வளர்ந்து வரும் ஒரு துறையாகும். அங்கு சடலங்களை உண்ணும் பூச்சிகள் எவ்வாறு ஆய்வு செய்யப்படுகின்றன. குற்றவியல் விசாரணைகளில் இது ஒரு முக்கியமான கருவியாக மாறியுள்ளது. தற்போதைய சூழ்நிலையில், தடயவியல் ஓடோன்டாலஜிஸ்டுகளின் பங்கு கடின திசு பரிசோதனையுடன் மட்டும் நின்று விடவில்லை. தடயவியல் குழுவின் ஒரு பகுதியாக, குற்றவியல் விசாரணைகளில் தடயவியல் ஓடோன்டால ஜிஸ்டுகள் ஈடுபடும் நிகழ்வுகள் அதிகரித்து வருவதால், தடயவியல் பூச்சியியல் மற்றும் தடயவியலில் அதன் பயன்பாடுகள் போன்ற வளர்ந்து வரும் அறிவியல்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தகவல் : ***ச.பூர்ணிமா, உதவிப் பேராசிரியர் (பூச்சியியல் துறை), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email : poorny29@gmail.com***

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கிராமப்புற குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு தனித்துவ அடையாள அட்டை

## மத்திய ஜல்சக்தி அமைச்சர் தொடங்கி வைத்தார்

புது தில்லி, மார்ச் 13

மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் சி.ஆர்.பாட்டீல் தலைமையில், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பொது சுகாதார பொறியியல் துறை, கிராமப்புற நீர் வழங்கல் மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைகளின் அமைச்சர்களுடன் ஜல் ஜீவன்இயக்கம் 2.0 –ஐ செயல்படுத்துவதற்கான செயல்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் இணை அமைச்சர் வி.சோமண்ணா மற்றும் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேம்பட்ட ஒதுக்கீடு மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களுடன் ஜல் ஜீவன் இயக்கம் 2.0 –ஐ 2028 டிசம்பர் வரை நீட்டிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்த பின்னணியில் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

கிராமப்புற குழாய் நீர் வழங்கல் சொத்துக்களின் முழுமையான டிஜிட்டல் மேப்பிங் செய்ய உதவும் திட்டத்தின் அடிப்படையிலான தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டைகளை மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் பாட்டீல் வெளியிட்டார். நாட்டில் முதன் முறையாக, ஒவ்வொரு கிராமப்புற குடிநீர் திட்டத்திற்கும் டிஜிட்டல் அடையாளம் ஒதுக்கப்பட்டு, கிராமப்புற நீர் வழங்கல் முறையை ஒரு ஒருங்கிணைந்த தேசிய தளத்திற்கு கொண்டு வருகிறது. இதுவரை, 31 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் 1.64 லட்சம் சுஜாலம் கான் அடையாள அட்டைகள் 67,000 சுஜாலம் பாரத் அடையாள அட்டைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுஜலம் பாரத் ஐடி திட்டத்தின் உள்கட்டமைப்பு ஐடி



மற்றும் சேவை பகுதி ஐடி ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது, இது கிராமப்புற நீர் வழங்கல் சேவை விநியோகத்தின் விரிவான டிஜிட்டல் தடத்தை உருவாக்குகிறது. இந்த முன்முயற்சி ஒரு குறிப்பிடத்தக்க டிஜிட்டல் சீர்திருத்தத்தை குறிக்கிறது.

ஜல்சக்தி அமைச்சர் உரையாற்றிய போது, திட்டங்களை சரியான நேரத்தில் முடிப்பதை உறுதி செய்து, கள கண்காணிப்பை வலுப்படுத்துமாறு மாநிலங்களை வலியுறுத்தினார். கிராமப்புற வீடுகளுக்கு நம்பகமான குழாய் நீர் விநியோகத்தை வழங்குவதில் மாநில அரசுகளின் பொறுப்பில் இந்த இயக்கத்தின் வெற்றி அடங்கியுள்ளதாக அவர் கூறினார்.

சில மாநிலங்களில் தொழில்நுட்பக் குறைபாடுகள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை எடுத்துரைத்த அவர், அதிகப்படியான அல்லது தொழில்நுட்ப ரீதியாக இணங்காத பணிகளின் விளைவாக ஏற்படும் எந்தவொரு செலவினத்தையும் அந்தந்த மாநில அரசுகள் ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கிராமப்புற நீர் வழங்கல் அமைப்புகளின் நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப விவரக்குறிப்புகள், செலவின வரம்புகள் மற்றும் முறையான மூல மதிப்பீடு ஆகியவற்றை கண்டிப்பாக கடைப்பிடிப்பதை அவர் வலியுறுத்தினார். பருவகால பற்றாக்குறையை எதிர்கொள்ளும் பகுதிகளில் நீர் சேமிப்பு மற்றும் ரீசார்ஜ் முயற்சிகளை விரிவுபடுத்த மாநிலங்களை அவர் ஊக்குவித்தார்.

நீரின் தரத்தைப் போலவே பணியின் தரமும் முக்கியமானது என்று அவர் கூறினார். எனவே, பணியின் தரத்தைப் பராமரிப்பதில் மாநிலங்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றும், அனுமதிக்கப்பட்ட அனைத்து பணிகளையும் முடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், அவற்றை விரைவாக முடிப்பதற்கான காலக்கெடுவிற்குள் திட்டங்களை தயாரிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். அமைச்சரவை ஒப்புதல் அளித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் கட்டமைப்பு சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான ஒரு வழியாகும் என்றும் அவை எழுத்திலும் உணர்விலும் பின்பற்றப்பட வேண்டும் என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396